பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 13 ஜுமாதல் ஆகிரா - 1433 ஏப்ரல்- 2012

## ஈமானை இழக்கச் செய்யும் கல்முனைக்குடி கடற்கரைப்பள்ளி கொடியேற்றம்

இஸ்லாம் மன்னிக்க முடியாத மிகப் பெரும் பாவமாகக் கருதுவது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதையாகும். இவ்வுலகில் தோன்றிய அத்தனை நபிமார்களினதும் முதன்மையான பணி இணைவைப்பை இல்லாதொழித்து அல்லாஹ்வை மாத்திரம் வணங்குகின்ற, அவனிடம் மாத்திரம் உதவி கேட்கின்ற, அவனிடம் மாத்திரம் பிரார்த்திக்கின்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதாகவே இருந்தது.

இணைவைத்தல் எத்தனை பெரிய கொடிய பாவம் என்பதை பின்வரும் அல்குர்ஆனின் மூன்று வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

### மன்னிக்கப்படாத பாவம்

'நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக்கவே மாட்டான். இதனைத் தவிர மற்றப் பாவங்களை தான் நாடியோருக்கு மன்னிப்பான். எவர் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறாரோ அவர் திட்டமாக வெகு தூரமான வழிகேட்டை அடைந்துவிட்டார்' (அல்குர்ஆன் 4:116).

### நன்மைகளை அழித்துவிடும் பாவம்

'நபியே நீர் இணைவைத்தால் நிச்சயமாக உமது அமல்கள் அழிந்துவிடும் (அல்குர்ஆன் 39: 65). மேலும் அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைத்திருந்தால் அவர்கள் செய்துகொண்டிருந்த (நற்காரியங்கள்) யாவும் அழிந்துவிடும்' (அல்குர்ஆன் 6:88).

### சுவர்க்கம் செல்வதை ஹறாமாக்கும் பாவம்

'யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கிறாரோ நிச்சயமாக அல்லாஹ் அவருக்கு சுவர்க்கத்தை ஹறாமாக்கிவிடுவான். அவர் தங்குமிடம் நரகம்தான்' (அல்குர்ஆன் 5:72).

ஒரு முஸ்லிம் அல்லாஹ்வை மாத்திரமே வணங்க வேண்டும். அவனிடம் மாத்திரமே உதவி கோர வேண்டும். அல்லாஹ்வுக்காக மாத்திரமே நேர்ச்சையை நிறைவேற்ற வேண்டும். அவனது பெயரிலேயே அறுத்துப் பலியிட வேண்டும். நபியவர்கள் கூறினார்கள்: 'நீ கேட்பதாயின் அல்லாஹ்விடமே கேள். நீ (உன் கஷ்டங்களைக் கூறி) உதவி தேடுவதாயின் அல்லாஹ்விடமே உதவி தேடு' (திர்மிதி, முஸ்னத் அஹ்மத்). மேலும் நபியவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வுக்கு வழிப்படுவதாக ஒருவர் நேர்ச்சை வைத்தால் அல்லாஹ்வுக்கு அந் நேர்ச்சையை நிறைவேற்றிவிடவும்' (புஹாரி, அபூதாவூத்).

எனவே, அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய மேற்கூறப்பட்ட செயல்களுள் ஒன்றை ஒரு கல்லுக்கோ, ஒரு கப்ருக்கோ, உயிரோடிருக்கும் ஒரு மனிதருக்கோ நிறைவேற்றினால் அது இணைவைத்தலாகிவிடும். ஒருவர் மண்ணறைக்குச் சென்று அங்கு அடக்கம் செய்யப்பட்டிருப்பவர்களிடம் தங்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் முறையிடுவது, அம்மண்ணறையைச் சுற்றிவருவது, அதை முத்தமிடுவது, எண்ணெய் தடவுவது, இவற்றின் மூலம் தனது தேவைகள் நிறைவேறும் என நம்புவது, அங்கு அடக்கப்பட்டிருப்பவரின் பெயரில் அறுத்துப் பலியிடுவது, அவருக்காக நேர்ச்சை செய்வது ஆகிய அனைத்தும் இணைவைத்தல் என்ற பெரும் பாவத்தைச் சேர்ந்தவைகளாகும்.

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளியைப் பொறுத்தவரை அங்கு மேற்கூறப்பட்ட அத்தனை இணைவைப்புகளும் நடைபெறுகின்றன. இத்தனையும் அங்கு நடைபெறுவதால் அது பள்ளிவாயல் என்ற தகுதியையும் இழந்துநிற்கிறது. பள்ளிவாயல் என்றால் அங்கு அல்லாஹ் மாத்திரம் வணங்கப்படவேண்டும். அல்லாஹ் மாத்திரம் அழைக்கப்பட வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: 'நிச்சயமாக பள்ளிவாயல்கள் அல்லாஹ்வுக்குரியவை. அங்கு நீங்கள் அல்லாஹ்வுடன் ஒருவரையும் அழைக்க வேண்டாம்' (72:18).

கல்முனைக்குடி கடற்கரைப் பள்ளியில் மண்ணறையில் அடக்கப்பட்டிருப்பவர்களை மக்கள் அழைத்து தமது தேவைகளை முறையிடுகிறார்கள். நபியவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் அல்லாத வேறு ஒருவரை அல்லாஹ்வுக்கு நிகராக அழைத்த நிலையில் யார் மரணிக்கிறாரோ அவர் நரகில் நுழைவார்' (புஹாரி). மேலும் இங்கு செல்லும் மக்கள் அல்லாஹ்வுக்காக மட்டும் செய்ய வேண்டிய நேர்ச்சை என்ற வணக்கத்தை மண்ணறையில் அடக்கப்பட்டிருப்பவர்களுக்காக நிறைவேற்றுகிறார்கள். ஷிர்க்கான வரிகளைக் கொண்ட பாடல்கள்

மார்க்க விடயங்களையும் த.்.வா செய்திகளையும் உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள
**f evrtj** என்று Type செய்து 40404க்கு SMS அனுப்பி வையுங்கள். இது முற்றிலும் இலவசமானது.
(Airtel & Hutch வலையமைப்புகளைத் தவிர)

பாடப்படுகின்றன. ஹறாமான இசை கலந்த பாடல்கள் ஒலிக்கின்றன. இவற்றுக்கு மேலதிகமாக ஆண் பெண் கலப்பு, அநாச்சாரங்கள், கலாசார சீர்கேடுகள் ஆகியன இடம்பெறுகின்றன. இத்தனை பாவச் செயல்களும் நடைபெறுகின்ற ஒரு இடத்தை எவ்வாறு பள்ளவாசல் என்று அழைப்பது என்பதை சற்று சிந்தித்தால் சாதாரண பாமர முஸ்லிமும் அங்கு செல்வதிலிருந்து விலகிக்கொள்வார். ஆனால் ஷைத்தான் அவ்வாறு சிந்திப்பதற்கு தடையாக நின்று பல கவர்ச்சிகளைக் காட்டி பலரை தனது வலைக்குள் சிக்கவைத்துக்கொண்டிருக்கிறான் என்பதுதான் உண்மையாகும்.

அல்லாஹ்வின் மார்க்கம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு ஷைத்தானின் அத்தனை செயற்பாடுகளும் அரங்கேறுகின்ற இம் மஸுதிக்கு செல்வது, அங்கு கூடி நிற்பது, உதவி ஒத்தாசை புரிவதற்காகச் செல்வது ஆகிய அனைத்தும் பாவச் செயல்களாகும். இவ்வாறான இடங்களை நோக்கி பயணம் செல்கையில் மரணம் வந்துவிட்டால் அது கெட்ட முடிவுக்குரிய அடையாளமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: ‘அல்லாஹ்வின் வசனங்கள் மறுக்கப்பட்டு, கேலி செய்யப்படுவதை நீங்கள் செவியுற்றால் அவர்கள் வேறு பேச்சுகளில் ஈடுபடும் வரை அவர்களுடன் அமராதீர்கள். (அவ்வாறு அமர்ந்தால்) நீங்களும் அவர்களைப் போன்றவர்களே என்று இவ்வேதத்தில் உங்களுக்கு அவன் அருளியுள்ளான். நயவஞ்சகர்களையும் (தன்னை) மறுப்போர் அனைவரையும் நரகில் அல்லாஹ் ஒன்றுசேர்ப்பான்’ (அல்குர்ஆன் 4:140).

### பொழுதுபோக்கிற்காகச் சென்று வரல்

சமூகத்திலுள்ள சிலர் இத்தகைய இணைவைப்புச் செயற்பாடுகளையோ, பாவச் செயல்களையோ அங்கீகரிப்பதில்லை. இருப்பினும் பொழுதுபோக்கிற்காக என்ற பெயரில் இத்தகைய இடங்களுக்கு சென்றுவருதைக் காணலாம். பொழுதுபோக்குவதற்குக் கூட மார்க்கத்தில் வரையறைகள் உள்ளன. பொழுதுபோக்கிற்காக செல்லுகின்ற இடம், அங்கு மேற்கொள்ளும் செயல்கள் அனைத்தும் ஆகுமானவையாக இருக்க வேண்டும். அப்போதுதான் அது அனுமதிக்கப்படும். முற்றிலும் மார்க்கத்துக்கு முரணான செயல்களும் அந்நிய மதத்தவரின் தேர்த்திருவிழா, அன்னதானம், கொடியேற்றம் போன்ற செயல்களும் நிறைந்திருக்கும் இவ்விடங்களுக்கு பொழுதுபோக்கிற்காகச் செல்வதும் பாவமாகும்.

பொழுதுபோக்கிற்காகத்தான் செல்கிறோம் என்றாலும் அவ்வாறு செல்வதன் மூலம் அங்கு நடக்கும் அநாச்சாரங்களுக்கு நாமும் மௌன அங்கீகாரம் வழங்குவதாக ஆகிவிடும். ஏனெனில் ஒரு மு.ஃமின் ஒரு பாவம் நடைபெறும் போது அதைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. நபியவர்கள் கூறினார்கள்: ‘உங்களில் ஒருவர் வெறுக்கத்தக்க ஒரு காரியத்தைக் கண்டால் அதை தனது கையால் தடுக்கவும். அதற்கு முடியாவிட்டால் தனது நாவினால் தடுக்கவும். அதற்கும் முடியாவிட்டால் தனது உள்ளத்தால் அதை வெறுக்கவும். அதுவே ஈமானின் மிகப் பலவீனமான நிலையாகும்’ (முஸ்லிம், அபூதாவூத், முஸ்னத் அஹ்மத்). எனவே, அல்லாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்ட ஒரு முஸ்லிம் இத்தகைய இடங்களுக்குச் செல்வதை மனதால் வெறுத்தொதுக்க வேண்டும்.

பிள்ளைகள் ஆசைப்படுகிறார்கள் என்பதற்காகவோ, மனைவி விரும்புகிறாள் என்பதற்காகவோ, நண்பர்கள் செல்கிறார்கள், அதற்காக கூடச் செல்கிறேன் என்றோ இத்தகைய அல்லாஹ்வின் கோபத்துக்குள்ளான இடங்களுக்கு செல்லக் கூடாது. இதையும் தாண்டி பிறரைத் திருப்திப்படுத்துவதற்காகவோ, அற்ப உலக இலாபங்களுக்காகவோ அங்கு சென்றால் அல்லாஹ்வின் கோபத்திற்குள்ளாக வேண்டியேற்படும் என்பதை மறந்துவிடக் கூடாது.

நபியவர்கள் கூறினார்கள்: ‘இருள் நிறைந்த இரவின் துண்டுகளைப் போன்று அடுக்கடுக்கான குழப்பங்கள் வருவதற்கு முன் நன்மைகள் செய்வதை தீவிரப்படுத்துங்கள். அவ்வேளை காலையில் மு.ஃமினாக இருப்பவன் மாலையில் காபிராகி விடுவான். மாலையில் மு.ஃமினாக இருப்பவன் காலையில் காபிராகி விடுவான். தனது மார்க்கத்தை அற்க உலக நோக்கத்திற்காக விற்றுவிடுவான்’ (முஸ்லிம்).

எல்லாம் வல்ல அல்லாஹ் அனைத்து வகையான இணைவைப்புகளில் இருந்தும் நம்மையும் நமது ஈமானையும் பாதுகாத்து, உண்மை முஸ்லிம்களாக மரணிக்கச் செய்து மறுமையில் அவனது நல்லடியார் கூட்டத்தில் நம்மை சேர்த்துவிடுவானாக.

## ஏறாவூரில் 8 மாணவர்கள் 9A சித்தி

**அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சை - 2011 பெறுபேறுகளின் அடிப்படையில் ஏறாவூரைச் சேர்ந்த 8 மாணவர்கள் 9 பாடங்களிலும் அதிவிசேட சித்தி (A) பெற்று சாதனை படைத்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:**

**மட்/அலிகார் தேசிய பாடசாலை - 4 மாணவர்கள்**

1. AC. முஹம்மத் வஸீம்
2. J. அஹ்மத் நிப்ராஸ்
3. A. பாதிமா மஹ்ஜபீன்
4. MS. ஸஹ்ரானி இல்மி

**மட்/ றஹ்மானியா மகா வித்தியாலயம் - 02 மாணவர்கள்**

5. AC. ஹும்ஸதுல் ஹும்ஸானி
6. A. ஸஹீலா பர்வீன்

**மட்/அறபா வித்தியாலயம் - 02 மாணவர்கள்**

7. YA. அப்ரார் ஆதிக்
8. A. ஆதில் அல்பிரைன்

## ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

**- தொடர் 05**

**(தொடர் 04ல் ஆரம்பத் தக்பீர் கூறி கைகளை உயர்த்தி நெஞ்சில் வைத்தல் பற்றி கலந்துரையாடப்பட்டது)**

**7) பார்வையைத் தாழ்த்தி, உள்ளச்சத்தோடு தொழுதல்**

தக்பீர் கூறி கைகளை நெஞ்சின் மீது வைத்ததும் பார்வையைத் தாழ்த்தி ஸுஜூத் செய்யும் இடத்தை நோக்குவது மிகவும் விரும்பத்தக்கதும் ஏற்றமானதுமாகும்.

தொழுகின்ற போது ஸுஜூத் செய்யும் இடத்தை பார்க்க வேண்டுமா, இல்லையா என்பது குறித்து அறிஞர்களிடம் இரு வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. இமாம் ஷாபிஈ றஹிமஹுல்லாஹ் போன்றோர் ஸுஜூத் செய்யும் இடத்தைப் பார்க்க வேண்டும் என்று கூறும் அதே வேளை, இமாம் மாலிக் (றஹிமஹுல்லாஹ்) போன்றோர் ஸுஜூத் செய்யும் இடத்தைப் பார்க்கத் தேவையில்லை, கிப்லா திசையையே நோக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். இவ்விரு கருத்துகளையும் ஹதீஸ்களை வைத்து நோக்குவது பொருத்தமாகும்.



ஸஹாபாக்கள் நபியவர்களுக்கு பின்னால் நின்று தொழும் போது ஸுஜூத் செய்யும் இடத்தை நோக்காமல் இமாமாக நின்று தொழுகை நடத்திக்கொண்டிருந்த நபியவர்களை அவதானித்துக்கொண்டிருந்ததற்கு ஆதாரமாக சில ஹதீஸ்கள் ஸஹீஹுல் புஹாரியில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நபியவர்கள் ஸஹாபாக்களின் இச் செயலை கண்டிக்கவுமில்லை.

அதே வேளை நபியவர்கள் தொழுகையில் தமது தலையைத் தாழ்த்தி ஸுஜூத் செய்யும் இடத்தைப் பார்ப்பார்கள் என்று சில ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன. அவற்றுள் சில பலவீனமானவை என்றாலும் பின்வரும் ஒரு ஹதீஸ் ஆதாரபூர்வமானதாகும்.

- நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தொழ நின்றால் தலையைத் தாழ்த்தி தமது பார்வையை நிலத்தை நோக்கிச் செலுத்தவார்கள். வேறு ஒரு ஹதீஸ் அறிவிப்பின் படி, நபியவர்கள் ஸுஜூத் செய்யும் இடத்தை நோக்குவார்கள் (ஹாகிம், பைஹகீ)

எனவே, ஸஹாபாக்கள் நபியவர்களுக்குப் பின்னால் நின்று தொழும்போது ஸுஜூத் செய்யும் இடத்தைப் பார்க்காமல் நபியவர்களை அவதானித்துக்கொண்டிருந்தமை தொடர்பான ஹதீஸையும் நபியவர்கள் தொழும்போது ஸுஜூத் செய்யும் இடத்தைப் பார்த்தார்கள் என்ற ஹதீஸையும் இணைத்து நோக்கும் போது பின்வரும் ஒரு முடிவுக்கு வர முடியும்.

ஸஹாபாக்கள் நபியவர்களின் தொழுகை அசைவுகளைக் கற்றுக்கொள்வதற்காகவே நபியவர்களை அவதானித்துக்கொண்டிருந்தார்கள். எனவே மஃமூம்களாக இருப்போர் இமாமின் அசைவுகளை அறிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படின் இமாமை நோக்குவதில் தவறில்லை. அவ்வாறு இமாமின் அசைவுகளை அறிந்துகொள்ள வேண்டிய தேவை இல்லையெனில் ஸுஜூத் செய்யும் இடத்தை நோக்குவதே சரியானதும் தொழுகையில் உள்ளச்சம் ஏற்படுவதற்கு மிக நெருக்கமானதுமாகும். அதே நேரம் இமாமாக நின்று தொழுகை நடத்துபவரும் தனியாக தொழுபவரும் நபியவர்கள் செய்தது போன்று ஸுஜூத் செய்யும் இடத்தை நோக்க வேண்டும் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

இதே வேளை இமாமாக இருந்தாலும் மஃமூம்களாக இருந்தாலும் வானத்தை நோக்கி பார்வையை உயர்த்துவது தடைசெய்யப்பட்ட ஒரு செயலாகும் என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

'தொழுகையில் வானத்தை நோக்கி தமது பார்வைகளை செலுத்துபவர்களின் பார்வைகளை அல்லாஹ் பறித்து விடட்டும்' என நபியவர்கள் எச்சரித்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

தொழுகையை ஆரம்பம் முதல் இறுதி வரைக்கும் அல்லாஹ் தன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற உணர்வோடும் உள்ளச்சத்தோடும் தொழுவது அவசியமாகும். 'தொழுகையில் உள்ளச்சத்தோடு நிற்கும் விசுவாசிகள் நிச்சயம் வெற்றிபெற்று விட்டார்கள்' என அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிடுகிறான் (23 : 1,2).

அதிகமானோர் தொழுகையை உற்சாகமின்றி சோம்பேறித்தனமாகவும் அலட்சியமாகவும் நிறைவேற்றுகிறார்கள். சோம்பேறித்தனத்தோடு தொழுகையை நிறைவேற்றுவது நயவஞ்சகர்களின் பண்பு என்று அல்லாஹ் மற்றுமோர் இடத்தில் குறிப்பிடுகிறான் (4 : 142).

தொழுகை என்பது அல்லாஹ்வுடன் நாம் நடத்தும் ஓர் உரையாடலாகும். 'ஓர் அடியான் தொழுகைக்காக நின்றுவிட்டால் அவன் அல்லாஹ்வுடன் உரையாடுகிறான்' என நபியவர்கள் கூறினார்கள் (புஹாரி). உலகில் ஓர் அதிகாரிக்கு முன் நின்று உரையாடும்போது நாம் மிகுந்த உற்சாகத்தோடும் அடக்கத்தோடும் மனதை ஒருமுகப்படுத்தியும் உரையாடுகிறோம். அனைத்தையும் படைத்துப் பரிபாலித்துக்கொண்டிருக்கும் சர்வ சக்தியும் அதிகாரமும் கொண்ட அல்லாஹ்வுடன் உரையாடும் போது நாம் எத்தனை பணிவோடும் உற்சாகத்தோடும் நிற்க வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

நபியவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்வைப் பார்ப்பது போன்று தொழுவீராக! நீ அவனைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற உணர்வோடு தொழு' (இப்னுமாஜா, முஸ்னத் அஹ்மத்)

**8) ஆரம்ப துஆ ஓதுதல்**

ஆரம்ப தக்பீர் கூறி கைகளை கட்டியதும் ஓதுவதற்கென்று பல துஆக்களை நபியவர்கள் கற்றுத்தந்திருக்கிறார்கள். அவற்றுள் ஒன்றுதான் வழமையாக பெரும்பாலானோர் ஓதுகின்ற வஜ்ஜஹ்து என்று ஆரம்பிக்கும் துஆவாகும். ஆயினும் இந்த வஜ்ஜஹ்து என்ற துஆ நபியவர்கள் கற்றுத்தந்த ஒரு நீண்ட துஆவின் ஒரு பகுதி மாத்திரமே ஆகும். அதைத் தவிர வேறு பல சிறிய துஆக்களையும் நபியவர்கள் கற்றுத்தந்திருக்கிறார்கள். அவற்றையும் மனனமிட்டு ஓதிக்கொள்வது மிகச் சிறந்ததாகும். அஊது, பிஸ்மி கூறாமல் இந்த துஆக்களை ஓத வேண்டும். (மறந்து ஒருவர் அஊது, பிஸ்மி கூறி விட்டால் குற்றமில்லை)

# இறுதிப் பயணம் மறுமை - 04

-அஷ்ஷெய்க் MIM. வபா (கபூரி)

14. குளிப்பாட்டி முடித்த பின் கபன்செய்தல் வேண்டும். கபன் ஒரு வெள்ளைத் துணியினால் அல்லது அதற்கதிகமான (ஒற்றைப்படையான) துணிகளினால் அமைய வேண்டும். கபன் செய்து முடிந்ததும் மையித்தை சுமந்துசென்று தொழுவித்து அடக்கம் செய்யவேண்டும்.

கபன் செய்துமுடிந்ததும் மையித்தை சுமந்துசென்று தொழுவித்து அடக்கம் செய்யவேண்டும். மையித்தை சுமந்து செல்லும் போது அமைதியாக எதுவும் கூறாது செல்ல வேண்டுமென்று ஹதீஸ் கூறுகின்றது. ஷாபிஈ மத்ஹபின் பிரபலமான இமாம்கள் கூட மையித்தை சுமந்து செல்லும் போது எவ்வும் கூறக்கூடாது என்று கூறுகிறார்கள். இதை விடுத்து முன்னால் ஒருவர் 'கூலூஇன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி றாஜிஊன் ஷஹாதா' என்று ஒருவர் கூறிக்கொண்டு செல்ல, மற்றவர்கள் எல்லோரும் 'அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸூலுல்லாஹ்' என்று பின்னாலுள்ளவர்கள் கூறி சத்தமிட்டுச் செல்வர். இதற்கு எங்குமே ஆதாரமில்லை. மேலும் பன்னீர் செம்பில் பன்னீரை நிரப்பி சந்தூக்குக்கு பன்னீரை தெளித்து தெளித்துச் செல்வர். இதற்கும் எந்தவொரு ஆதாரமும் கிடையாது. ஏனையோர் கதைத்துக் கொண்டும் செல்வர். பின்தொடர்ந்து செல்வோர் மௌனமாக மரணத்தையும் மறுமையையும் நினைத்துக்கொண்டு செல்வதே நபிவழியாகும்.

15. ஜனாஸாவை விரைவாக கொண்டு செல்ல வேண்டும். ஜனாஸாவை விரைவாக கொண்டுசெல்லுங்கள், அது நல்ல ஸாலிஹான மனிதரின் ஜனாஸாவாக இருந்தால் அதை நீங்கள் அதன் நன்மையின்பால் விரைவாக கொண்டு போய் சேர்த்து விடுகின்றீர்கள். அது தீய மனிதர் ஒருவரின் ஜனாஸாவாக இருந்தால் தீமையை உங்கள் தோள்களிலிருந்து இறக்கி விடுகின்றீர்கள் என்று நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.

16. ஜனாஸா தொழுகை நடாத்துமிடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டால் எல்லோரும் எழுந்து நின்று ஸூறதுல் இக்லாசை சத்தமிட்டு ஓதுகின்றனர். எதுவரை என்றால் ஜனாஸாத்தொழுகைக்காக வுழு செய்வோரெல்லாம் வுழு செய்து முடித்து வந்து சேரும்வரை இப்படி செய்வர். இதற்கும் நபிவழியில் ஆதாரம் கிடையாது.

17. ஜனாஸாத் தொழுகையில் நான்கு தக்பீர்கள் நபியவர்கள் சொல்வார்கள் என்றே வந்துள்ளதே தவிர நான்கு தக்பீர்கள் கட்டுவார்கள் என்று வரவில்லை. ஆகவே ஆரம்ப தக்பீர் கட்டிய பின்னர் அதே நிலையில் கைகளை வைத்துக்கொண்டே தக்பீர்களை சொல்வதுதான் சுன்னத்தாகும். முதலாவது தக்பீர் கூறிய பின் அஊது, பிஸ்மியுடன் ஸூறா பாதிஹாவை ஓத வேண்டும். இரண்டாவது தக்பீர் கூறிய பின் நபியவர்கள் மீது ஸலவாத் கூற வேண்டும்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்

اللَّهُمَّ بَاعِدْ بَيْنِي وَبَيْنَ خَطَايَايَ كَمَا
بَاعَدْتَ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ اللَّهُمَّ
نَقِّنِي مِنْ خَطَايَايَ كَمَا يُنَقَّى الثَّوْبُ
الْأَبْيَضُ مِنَ الدَّنَسِ اللَّهُمَّ اغْسِلْنِي مِنْ
خَطَايَايَ بِالثَّلْجِ وَالْمَاءِ وَالْبَرَدِ

பொருள்: யாஅல்லாஹ், கிழக்குக்கும் மேற்குக்கும் இடையில் நீ ஏற்படுத்தியுள்ள தூரத்தைப் போன்று எனக்கும் என் தவறுகளுக்குமிடையில் தூரத்தை ஏற்படுத்துவாயாக. அழுக்கிலிருந்து வெண்ணிற ஆடை தூய்மைப்படுத்தப்படுவது போன்று எனது தவறுகளிலிருந்து என்னைத் தூய்மைப்படுத்துவாயாக. நீரினாலும் குளிர்ந்த நீரினாலும் என் தவறுகளிலிருந்து என்னைக் கழுவி விடுவாயாக. (புஹாரி, முஸ்லிம்)

سُبْحَانَكَ اللَّهُمَّ وَبِحَمْدِكَ
وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالَى جَدُّكَ
وَلَا إِلَهَ غَيْرُكَ

பொருள்: யா அல்லாஹ் உன்னைப் புகழ்வதோடு உன்னைத் தூய்மைப்படுத்துகிறேன். உனது நாமம் உயர்வானது. உனது கண்ணியம் மேன்மைமிக்கது. உன்னைத்தவிர வேறு நாயன் இல்லை. (முஸ்லிம், அபூதாவூத்)

இது போன்று இன்னும் பல துஆக்கள் உள்ளன. விரிவஞ்சி அவை விடப்படுகின்றன. புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி உள்ளிட்ட பல ஹதீஸ் நூல்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்...)

## மிச்நகர் வித்தியாலயத்திற்கு உலகளாவிய விருது

**நாடு முழுவதும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கிடையே பிரிட்டிஷ் கவுன்ஸில் ஏற்பாட்டில் நடைபெற்ற வகுப்பறைக்கல்வியை இணைக்கும் (connecting class room) செயற்திட்டத்தில் மட்/மம /மிச்நகர் வித்தியாலயம் பங்கேற்றது.**

**ஆங்கில மொழி மூலம் தனியாள், பாடசாலை, ஊர், நாடு தொடர்பான தகவல்களை கண்காட்சி, களப் பயணம், புகைப்படப் பிரதிகள், கட்டுரை, செய்தித் துணுக்குகள், இன்டநெட் ஊடாக பிரித்தானிய நாட்டு மாணவர்களோடு இவ்வித்தியாலய மாணவர்களைத் தொடர்பாடலில் ஈடுபடுத்தி இச் செயற்றிட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்தியமைக்காக இவ்வித்தியாலயம் 'வகுப்பறைக்கல்வியை இணைக்கும் சர்வதேச விருது' என்ற உயரிய கௌரவத்தினைத் தட்டிக்கொண்டது.**

**இவ்வித்தியாலய அதிபர் ஜனாப் MAM. கலீல் அவர்களின் வழிகாட்டலில் ஆங்கிலப் பாட ஆசிரியர் ஜனாப் S. அஹ்மத் லெப்பை அவர்கள் எடுத்துக்கொண்ட முழு முயற்சியின் காரணமாக இறைவன் உதவியால் இவ் விருது கிடைக்கப்பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.**

**கடந்த 26.03.2012 இல் கண்டி ஏர்லஸ் ரியேஜென்ஸி ஹோட்டலில் இடம்பெற்ற விருது வழங்கும் வைபவத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன அவர்கள் பிரிட்டிஷ் செயற்றிட்ட அதிகாரிகள் முன்னிலையில் இவ்விருதை வழங்கிவைத்தார்.**

**தகவல்: AM. றாஜீன் ஆசிரியர்**

# துஆவின் முக்கியத்துவமும் கூட்டு துஆ பற்றிய ஓர் இஸ்லாமியப் பார்வையும்

**- அபூ ஸைனப்**

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் - ஆணாயினும் பெண்ணாயினும் - பிறந்தது முதல் மரணிக்கும் வரை பல்வேறு தேவைகளையும் பிரச்சினைகளையும் சந்தித்த வண்ணமே வாழ்ந்துகொண்டிருக்கிறான். தேவைகள் எழாத எந்த மனிதனும் இவ்வுலகில் இல்லை. பிரச்சினைகளை சந்திக்காத மனிதனும் இதுவரை உலகில் பிறக்கவுமில்லை, இனிமேல் பிறக்கப்போவதுமில்லை. உலகில் பிறந்த உயர்ந்த மனிதர்களாகிய நபிமார்களுக்கே பல்வேறு தேவைகளும் பிரச்சினைகளும் இருந்தன.

மனிதனுக்கு தேவைகளும் பிரச்சினைகளும் ஏற்படும் போதெல்லாம் அவற்றைத் தீர்த்துக்கொள்வதற்கு அல்லாஹ்வின் அருளும் அவனது உதவியும் தேவையாகின்றன. இவ்வேளையில்தான் மனிதன் துஆவின் பெறுமதியை, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்கிறான்.

தேவைகள் ஏற்படாத நாட்களில்லை. பிரச்சினைகளை சந்திக்காத தருணங்களும் இல்லை. நாளாந்தம் பல்வேறு தேவைகள் ஏற்படுகின்றன. தனிப்பட்ட, குடும்ப, சமூக ரீதியான பிரச்சினைகள் நாளாந்தம் தோன்றுகின்றன. அவ்வாறெனில் நாளாந்தம் மனிதன் அல்லாஹ்விடம் கையேந்த வேண்டிய, துஆ செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

தமக்கு தேவைகள், பிரச்சினைகள் ஏற்படும் போது மனிதர்களில் பெரும்பாலோர் முதலாவதாக உலகத்து மனிதர்களின் தயவையும் உதவியையுமே நாடி நிற்கின்றனர். மனிதர்களால் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாத போது, அல்லது முடியாது என கைவிரித்து விடும் போதுதான் மனிதன் அவநம்பிக்கையின் விளிம்பில் நின்றுகொண்டு இறுதியாக அல்லாஹ்விடம் கையேந்த வேண்டும் என்ற ஞானத்தைப் பெறுகிறான்.

அல்லாஹ்வை தன் மனதில் ஈமான் கொண்ட ஒரு மு:ஃமின் இவ்வாறிருக்கக் கூடாது. எந்த தேவை, பிரச்சினை, நோய், கஷ்டம் ஏற்பட்டாலும் அது பற்றி முறையிட வேண்டிய-தேவையை நிறைவேற்றித் தருமாறு, பிரச்சினைகளைத் தீர்த்து வைக்குமாறு, நோயைக் குணப்படுத்துமாறு மன்றாட வேண்டிய முதலாமவன் அல்லாஹ்வாகத்தான் இருக்க வேண்டும். அடுத்த கட்டமாகத்தான் தேவையேற்படின் ஏனைய மனிதர்களை நாடவேண்டும். அவ்வாறு செய்பவன்தான் ஓர் உண்மை மு:ஃமினாவான்.

ஈமானில் பரிபூரணத் தன்மையை அடைந்திருந்த நபிமார்கள் இப்படித்தான் நடந்துகொண்டார்கள். வாழ்வில் ஒரு தேவை, ஒரு பிரச்சினை, ஒரு நோய் ஏற்பட்டு விட்டதா? முதலாவதாக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். ஒரு தடவையல்ல, பல தடவைகள் தமது தேவைகளை நிறைவேற்றித் தருமாறு, தமது நோயை குணப்படுத்துமாறு அல்லாஹ்விடம் அழுதார்கள், முறையிட்டார்கள்.

முதல் மனிதர் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களும் அவர்களது மனைவி அன்னை ஹவ்வா அவர்களும் அல்லாஹ் இட்ட வரம்பை மீறிய போது, 'எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே அநியாயம் செய்துகொண்டோம். நீ எங்களை மன்னித்து அருள்புரியவில்லையென்றால் நாங்கள் நட்டவாளர்களாகி விடுவோம் என்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள்' (அல்குர்ஆன் 7:23)

நபி நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது சமூகத்தாரின் பல்வேறு துன்பங்களுக்குள்ளான போது 'நிச்சயமாக நான் (எனது சமூகத்தினரால்) மிகைக்கப்பட்டு விட்டேன். எனவே நீ எனக்கு உதவி செய்வாயாக' என்று தனது கஷ்டத்தை கூறி அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள் (அல்குர்ஆன் 54:10).

நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தன் மகன் இஸ்மாஈல் அலைஹிஸ் ஸலாம் அவர்களுடன் இணைந்து க:ஃபாவின் அடித்தளங்களைக் கட்டிமுடித்து விட்டு 'எங்கள் இறைவனே! (எங்களது இப்பணியை) எங்களிலிருந்து ஏற்றுக்கொள்வாயாக. நிச்சயமாக நீ செவியேற்பவன், நன்கறிந்தவன்' என்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள் (2:127).

நபி ஸுலைமான் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் 'என் இறைவனே! என்னை நீ மன்னித்துவிடுவாயாக. எனக்குப் பின்னர் எவருக்குமே கிடைக்காத ஓர் ஆட்சியை எனக்கு நீ வழங்கிவிடுவாயாக' என்று அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள் (38:35).

நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் 'என் இறைவனே! என் நெஞ்சை விரிவாக்கி வைப்பாயாக. என்னுடைய காரியத்தை எனக்கு எளிதாக்கி வைப்பாயாக. என் நாவிலுள்ள முடிச்சை அவிழ்த்து விடுவாயாக' என்று தங்களுடைய தேவைகள், கஷ்டங்களையெல்லாம் அல்லாஹ்விடம் முறையிட்டார்கள் (20:25-28).

இவ்வாறே நமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்விடம் கேட்ட பிரார்த்தனைகள் ஹதீஸ்களில் அதிகம் காணப்படுகின்றன. இவை யாவும் மு:ஃமின்கள் அனைவருக்கும் பாடமாக அமைய வேண்டும்.

நமக்கு ஒரு கடன் தொல்லையா? அதை நிவர்த்திக்குமாறு முதலில் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும். நமக்கு ஒரு வீடு கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டதா? அதற்குரிய ஏற்பாட்டைச் செய்து தருமாறு முதலாவதாக அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். கற்கும் பாடத்தில் நமக்கு ஒரு விடயம் விளங்கவில்லையா? அதை விளங்கப்படுத்தித் தருமாறு ஆரம்பமாக அல்லாஹ்விடம் கோர வேண்டும். இப்படி உலகில் ஏற்படும் எந்த ஹலாலான தேவையாயினும் பிரச்சினையாயினும் முதலில் அல்லாஹ்விடம் முறையிடுகின்ற அடிப்படை ஈமானியப் பண்பை நாம் நாளாந்தப் பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: 'நீங்கள் என்னிடமே பிரார்த்தியுங்கள். நான் உங்களுக்குப் பதிலளிப்பேன்' (40:60). மேலும் அல்லாஹ் கூறுகிறான்: 'நபியே என் அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால், நிச்சயமாக நான் அவர்களுக்கு மிக அருகிலேயே இருக்கிறேன், பிரார்த்திப்பவரின் பிரார்த்தனைக்கு பதிலளிப்பேன் என்று கூறுவீராக' (2:186).

நாம் நமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக மனிதர்களிடம் செல்லும் போது மனிதர்கள் சில நேரம் முகம் சுளிக்கிறார்கள், சிலர் கோபமடைகிறார்கள், சிலர் முடியாது என ஒரேயடியாக மறுத்துவிடுகிறார்கள். திரும்பத் திரும்ப கேட்கும் போது எரிச்சலடைகிறார்கள். ஆனால், அல்லாஹ்வோ மனிதர்கள் எத்தனை தடவை கேட்டாலும் தனது அடியான் தன்னிடம் நெருங்கி விட்டானே என்று சந்தோஷப்படுகிறான். பல தடவைகள் சலிக்காமல், அலுக்காமல் கேட்கும் போது மகிழ்ச்சியின் உச்சத்தால் கேட்பதைக் கொடுத்து விடுகிறான். நபியவர்கள் கூறினார்கள்: 'நீங்கள் சலிப்படையும் வரை அல்லாஹ் சலிப்படையமாட்டான்' (புஹாரி, முஸ்லிம்).

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்

# ஐயமும் தெளிவும்

**ஐயம்** : அநேகமான பள்ளிவாயல்களில் ஜமாஅத் தொழுகையை நடாத்த ஆரம்பிக்கும் போது இமாம் ஸப்புகளை சீர்படுத்துமாறு கூறியதும் தமது இரு கரங்களையும் ஏந்தியவாறு அநேகமானோர் ஆமீன் என்று கூறுகிறார்கள். இது சம்மந்தமான இஸ்லாமிய கண்ணோட்டம் யாது?

- MHM. **அஸ்ஸீர்தீன், ஜிப்ரி தைக்கா வீதி, ஏறாவூர் 03**

**தெளிவு** : நான் எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுதுகொள்ளுங்கள் என்று நபியவர்கள் கூறினார்கள் (புஹாரி). நபியவர்கள் தொழுத முறை பற்றி ஹதீஸ்களில் கூறப்பட்டதை ஒவ்வொரு முஸ்லிமும் கற்றறிந்து ஆரம்பத்திலிருந்து இறுதி வரை நபியைப் பின்பற்றி தொழுவது கடமையாகும்.

நபியவர்கள் இமாமாக நின்று தொழுகை நடாத்திய முறையை நாம் நோக்குவோமாயின், தொழுகையை ஆரம்பிப்பதற்கு முன் ஸஹாபாக்களை நோக்கி ஸப்புகளை சீர்படுத்தி நெருக்கமாக நில்லுங்கள் என்று கூறுவார்கள். கூறுவதோடு மட்டுமல்லாது ஸப்புகள் சீராகி விட்டன என்பதை உறுதிப்படுத்திய பின்பே தொழுகையை ஆரம்பிப்பார்கள் (இது பற்றிய விபரங்களை வழிகாட்டி இதழ் 11ல் விரிவாக பார்க்கவும்).

இன்று பல பள்ளிவாயல்களில் தொழுகை நடாத்துவோர் ஸப்புகளை சீராக்கிக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு, நபியவர்கள் கூறியதற்கு மேலதிகமாக 'அல்லாஹ் உங்களுக்கு றஹ்மத் செய்வானாக' என்றும் கூறுவார்கள். அதற்கு மஃமூம்கள் ஆமீன் என்று கூறுவார்கள். நபியவர்கள் இவ்வாறு கூறியதுமில்லை, ஸஹாபாக்கள் ஒருபோதும் ஆமீன் என்று கூறியதுமில்லை.

சிலர் இதை நல்ல காரியம்தானே என்று வியாக்கியானம் செய்ய முடியும். அவ்வாறாயின் இந்த நல்ல காரியம் நபியவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் தெரியாமற் போய் விட்டதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'அல்லாஹ்வுக்கு நெருக்கத்தை ஏற்படுத்துகின்ற எந்தவொரு நற்காரியத்தையும் நான் உங்களுக்கு ஏவாமல் விட்டதில்லை' என்று நபியவர்களே குறிப்பிடுகிறார்கள் (தபரானி).

நல்ல காரியமாயின் நிச்சயம் நபியவர்கள் அதுபற்றி கூறியிருப்பார்கள் என்பதோடு, நபியவர்கள் சொல்லாத, செய்யாத, அங்கீகரிக்காத எந்தச் செயலும் நற்காரியமாக இருக்கவே முடியாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிய வேண்டும்.

நபியவர்கள் ஓர் அரைகுறை மார்க்கத்தை நமக்கு தந்துவிட்டுப் போகவில்லை. பூரணப்படுத்தப்பட்ட ஓர் உன்னத மார்க்கத்தையே தந்துவிட்டுச் சென்றார்கள். 'இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தைப் பூரணப்படுத்திவிட்டேன்' (5 : 3) என்ற அல்குர்ஆன் வசனத்தை அல்லாஹ் நபியவர்களின் பிரியாவிடை ஹஜ் தருணத்தில் இறக்கி மார்க்கத்தைப் பூரணப்படுத்தியதற்குப் பின், ஒரு சிறு சொல்லைக் கூட அதிகரிக்க வேண்டிய எந்த அவசியமும் இந்த மார்க்கத்துக்கு இல்லை. எந்தச் சிறிய காரியமாயினும் பெரிய காரியமாயினும் அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு கூறியவற்றோடு மட்டும் நாம் நின்றுகொள்ள வேண்டும். அதுவே அல்லாஹ்வையும் நபிகளாரையும் உண்மைக்கு உண்மையாக நேசிப்பதன் வெளிப்பாடாகும். அல்லாஹ் மிக அறிந்தவன்.

## அல்குர்ஆனில் விஞ்ஞானம்

### ஓரங்களில் குறையும் பூமி

'பூமியை அதன் ஓரங்களிலிருந்து நாம் (படிப்படியாக) குறைத்து வருகிறோம் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா? மேலும் அல்லாஹ்வே தீர்ப்பளிப்பவன். அவன் தீர்ப்பை மாற்றுவோர் யாருமில்லை. மேலும் அவன் கேள்வி கணக்குக் கேட்பதில் மிகத் தீவிரமானவன்' (அல்குர்ஆன் 13:41).

'எனினும் இவர்களையும் இவர்களுடைய மூதாதையரையும் அவர்களுடைய ஆயுட்காலம் வளர்ந்தோங்கும் வரை சுகங்களை அனுபவிக்கச் செய்தோம். நாம் பூமியை அதன் ஓரங்களிலிருந்து குறைத்துக் கொண்டு வருகிறோம் என்பதை இவர்கள் காணவில்லையா? இவர்களா மிகைத்து வெற்றிகொள்பவர்கள்?'( 21:44 )

நிலப்பரப்பு சிறிது சிறிதாக கடலால் விழுங்கப்பட்டு குறைந்து வருவதை சமீப காலத்தில் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அல்குர்ஆன் அருளப்பட்ட காலமான 14 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் நிலப்பரப்பு கடலால் அரிக்கப்பட்டு அதன் ஓரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துவருவதை யாரும் அறிந்திருக்க முடியாது. அண்மைக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்பு 14 நூற்றாண்டுகளுக்கு முன் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளமையானது, அல்குர்ஆன் இறைவனின் வார்த்தையே என்பதற்கு சான்றாக அமைந்திருக்கின்றது.

## உடல் நலன் பேண ஆரோக்கியக் குறிப்புகள் சில...

**1. தினமும் ஒரு குவளை மாதுளை ஜூஸ் குடிப்பது. உடலில் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை என பல பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்கும்.**

**2. வெள்ளைப் பூண்டு சாப்பிட்டால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி வெகுவாக அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாவதோடு, புற்றுநோய் செல்கள் உருவாகாமலும் தடுக்கும்.**

**3. இளவயதில் தினமும் ஒரு கப் பால் குடிப்பதனால் எலும்புகள் வலுவடைந்து கல்சியச் சத்தும் அதிகரிக்கும்.**

**4. புற்றுநோய் செல்களைத் தகர்க்கும் சக்தி திராட்சையின் தோலில் இருக்கிறது. திராட்சை விதைகளிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்கள் வைரஸ் எதிர்ப்புச் சக்தியைத் தூண்டுகின்றன.**

**5. அப்பிள் பழம் மார்பகப் புற்று உள்ளிட்ட பல்வேறு புற்று நோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றல் பெற்றது.**

## க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் அகில இலங்கையில் முதலிடம் பெற்று சாதனை

கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளில் இலங்கையிலுள்ள 94 கல்வி வலயங்களிலும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றிய 1215 மாணவர்களில் 973 பேர் உயர் தர வகுப்புகளில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். இது 100க்கு 80.08 வீதமாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்த இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஆய்வு அபிவிருத்திப் பிரிவு வலய ரீதியாக ஒப்பீட்டினை மேற்கொண்டதன் அடிப்படையிலேயே மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் அகில இலங்கையிலும் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும் இப்பரீட்சைப் பெறுபேறுகளில் ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகள் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதுடன் 29 மாணவர்கள் 9 பாடங்களிலும் அதி விசேட சித்தி (A) பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இச்சாதனைக்குக் காரணமான வல்ல அல்லாஹ்வைப் புகழ்வதோடு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் உருவாகுவதற்குப் பாடுபட்ட அரசியல்வாதிகள், அயராது உழைத்த வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள், இச்சாதனையை நிகழ்த்திய அனைத்துப் பாடசாலை மாணவர்கள், தியாகத்தோடு கற்பித்த ஆசிரியர்கள், வழிப்படுத்திய அதிபர்கள், பெற்றோர், அலுவலக உத்தியோகத்தர்கள், மறைமுகமாய் நின்று பங்களித்த அனைவருக்கும் ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

---

### பெரியோர்களுக்கான அல்குர்ஆன் ஓதல் பயிற்சி வகுப்பு

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ்வின் வீடுகளில் ஒரு வீட்டில் ஒரு கூட்டத்தினர் அமர்ந்து அல்லாஹ்வின் வேதத்தை ஓதுகிறார்கள். மேலும் அதனை அவர்களுக்கிடையே கற்றும் கொள்கிறார்கள் என்றால் அவர்களின் மீது ஸகீனா எனும் அமைதி இறங்குகிறது, அல்லாஹ்வின் அருள் அவர்களை சூழ்ந்து கொள்கின்றது. அல்லாஹ்வின் அமரர்களான மலக்குகள் அவர்களை சூழ்ந்துகொள்கின்றனர். அல்லாஹ் தன்னிடமுள்ள மலக்குகளிடம் இவர்களைப் பற்றி பிரஸ்தாபிக்கின்றான்'' (அபூதாவூத்).

மேற்கண்ட ஹதீஸில் கிடைக்கும் பயன்கள்:-

1- ஒருவர் ஓத மற்றவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், குர்ஆனைப் படிக்கிறார்கள், அதனைத் திருத்தமாக ஓதும் முறையினை - தஜ்வீதினை படிக்கிறார்கள். இது ஒரு தனிப்பட்ட வணக்கமாக இருக்கிறது. அதற்குரிய நற்கூலியும் கிடைக்கிறது.
2- நிம்மதி, அமைதி, அல்லாஹ்வின் அருள், மலக்குகளின் அரவணைப்பு கிடைக்கின்றது.
3- அல்லாஹ் தன்னிடமுள்ள வானவர்களிடம் இவர்களைப் பற்றி பிரஸ்தாபிக்கின்றான்.
4- இதற்காக இந்தளவு நேரத்தை செலவிடும்போது, மஸ்ஜிதில் தங்கியிருந்து இபாதத்தில் ஈடுபட்ட நன்மை வேறு கிடைக்கிறது.

ஆகவே ஏறாவூர் தவ்ஹீத் ஜும்ஆ மஸ்ஜிதில் புதன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் ம.்ரிப் தொழுகையைத் தொடர்ந்து இஷா வரையிலும் பெரியோர்களுக்காக நடைபெறும் அல் குர்ஆன் ஓதற் பயிற்சி வகுப்பில் எந்தப் பாகுபாடும் பார்க்காமல் கலந்து கொள்ளுமாறும், மேற்கண்ட நன்மைகளை அடைந்து கொள்ளுமாறும் அனைவரையும் அழைக்கின்றோம்.


மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:
ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள
யூரோ போன் வேர்ல்ட்
இல.17, பிரதான வீதி, ஏறாவூர்
Fax: 065 2240283
டயலொக் மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) இங்கே செலுத்த முடியும்.
மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

CGS
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk
உங்களது கணனி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?
சேவைகள்
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues
இன்றே அழையுங்கள் 0772300420

ஏறாவூரில்
COMPUTERS & REPAIRING




**இஸ்லாமிய அறிவை விருத்தி செய்துகொள்ள தமிழ் மொழியில் இஸ்லாமிய இணையத்தளங்கள்**

1. www.tamilislam.com
2. www.readislam.net
3. www.idhuthanislam.com
4. www.Islamiyadawa.com
5. www.muthupet.org
6. www.islamkural.com
7. www.albaqavi.com
8. www.samarasam.net
9. www.suvanathenral.com
10. www.thiruquran.com
11. www.rahmath.net
12. www.islamparvai.com
13. www.nidur.info
14. www.makkamasjid.com
15. www.tamilislamicaudio.com
16. www.tamilbayan.com





**CGS**
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94 772300420, +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி தகமைகளை **CGS** உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**CGS இன் கணணி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids

தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0772300420


## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஏழு கேள்விகள்

1. தொழுகையில் வானத்தை நோக்குவது பற்றி நபியவர்கள் எவ்வாறு எச்சரித்தார்கள்?
2. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த பலஸ்தீன் ஜனாதிபதியின் பெயர் யாது?
3. ஜனாஸாவைப் பின்தொடர்ந்து செல்வோர் எவ்வாறு செல்ல வேண்டும்?
4. அல்லாஹ்வின் வசனங்கள் மறுக்கப்படும் இடங்களில் இருக்கக்கூடாது என்ற வசனம் எந்த ஸூறாவில் இடம்பெறுகிறது?
5. நூஹ் நபி அவர்கள் மேற்கொண்ட பிரார்த்தனை யாது?
6. மார்க்கத்தைப் பூரணப்படுத்தி விட்டதாக குறிப்பிடும் அல்குர்ஆன் வசனம் எந்த அத்தியாயத்தில் இடம்பெறுகிறது?
7. அண்மையில் இலங்கையில் சில பெரும்பான்மை இனத்தவரால் உடைக்கப்பட்ட பள்ளிவாயல் எங்கே அமைந்துள்ளது?

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **14.05.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டாது.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**1ம் இடம் : MM. பாதிமா அஸ்கா, காதியார் வீதி, ஏறாவூர் 06**

**2ம் இடம் : F. ஷகீலா பர்வீன், போக்கர் வீதி, ஏறாவூர் 06A**

**3ம் இடம் : AM. ஆதில் ஹஸன், ஜின்னா வீதி, ஐயங்கேணி, ஏறாவூர் 03**

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. MHM. தாஹிர், காட்டுப்பள்ளி புதிய வீதி, ஏறாவூர் 02
2. BM. நாஸித், புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03
3. MIF. மஹ்பூபா, ஓடாவியார் வீதி, ஏறாவூர்
4. JM. பௌஸான், காதியார் வீதி, ஏறாவூர் 06
5. பாதிமா றிப்னா, பழைய சந்தை வீதி, ஏறாவூர்

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. இளம் வயதினரிடையே தவறான தொடர்புகள், தொழுகைகள் பாழடிக்கப்படுதல்
2. ஜெனீவா
3. மேன்மையான எனதிறைவன் மிகத் தூய்மையானவன்
4. கைவிரல்களைப் பொத்தாமலும் மடக்காமலும் நீட்டி வைத்திருத்தல்
5. வலது பக்கத்திலிருந்து ஆரம்பித்தல்
6. ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக...
7. ஆப்கானிஸ்தான்